விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 183 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 06 வெள்ளிக்கிழமை (20.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சைக்கிள் - மான் - சுயேட்சைக்குழு இணைந்து காரைநகரில் ஆட்சி



### தவிசாளராக கிருஷ்ணன் கோவிந்தராஜன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, சுயேட்சைக்குழு ஆகியன இணைந்து காரைநகர் பிரதேச சபையில் ஆட்சி அமைத்துள்ளன.

மேலும் காரைநகர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சுயேட்சைக்குழுவின் கிருஷ்ணன் கோவிந்தராசன் தெரிவானார்.

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் 15ஆம் பக்கம் பார்க்க

## வலி.தெற்கு பிரதேச சபை தமிழ் அரசுக் கட்சி வசம்

### தவிசாளராக பிரகாஸ் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக தியாகராஜா பிரகாஸ் தெரிவானார்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரைத் தெரிவு செய் 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டமொன்று நடைபெறவுள்ளது.

செம்மணிப் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு ஒருங் 02ஆம் பக்கம் பார்க்க

## ஹெகலிய இறக்குமதி செய்த மருந்தில் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கும் பக்றீரியா

### ஆய்வில் உறுதி என நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)




முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இறக்குதி செய்த மருந்தில் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் கொடிய பக்றீரியா நீர் இருப்பது ஆய்வில் உறுதியாகியுள்ளது என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானின் அணுசக்தி தளங்களை தாக்கி அழித்த இஸ்ரேல் இராணுவம்

(ஜெருசலேம்)

அரக் மற்றும் நடான்ஸில் உள்ள ஈரானின் அணுசக்தி தளங்களை வான்வழித் தாக்குதல் மூலம் தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒரு அறிக்கையில் இஸ் 02ஆம் பக்கம் பார்க்க

## வலி.மேற்கு பிரதேச சபை தமிழ் அரசுக் கட்சி ஆட்சி

### தவிசாளராக ஜெயந்தன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக சண்முகநாதன் ஜெயந்தன் தெரிவாகியுள்ளார்.

வலிகாமம் 15ஆம் பக்கம் பார்க்க

## காரைநகரில் மயங்கி விழுந்த பெண் மரணம்

02ஆம் பக்கம் பார்க்க

## தவறுதலாக வாக்களித்ததால் சங்கு கூட்டணி உறுப்பினர் கட்சியிலிருந்து இடைநிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிலைப்பாட்டுக்கு மாறாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை வாக்களிப்பின் போது செயற்பட்ட கட்சி உறுப்பினர் ஒருவர், கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத் 15ஆம் பக்கம் பார்க்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சபையின் சந்தை கட்டடத் தொகுதிகளுக்கு

## முதல்வர் மதிவதனி களவிஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சந்தைக் கட்டடத் தொகுதிகளின் பிரச்சினைகளை ஆராயும் வகையில் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா அவர்கள் நேற்று கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அந்த வகையில் மாநகர சபையின் பாசையூர் மற்றும் சின்னக்கடை சந்தைக் கடைத் தொகுதிகளுக்கு விஜயம் செய்து அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களிடம் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டு அறிந்து கொண்டார்.

முதல்வரின் வருகையை உணர்ந்து கொண்ட சந்தை வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் சந்தைத் தொகுதியில் உள்ள சுகாதார குறைபாடுகளை சுட்டிக்காட்டினர். சந்தைகளின் சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முதல்வர் மதிவதனி அவர்கள் சுகாதாரம் மற்றும் பொதுச் சுகாதார பொறியியற் பிரிவிற்கு ஒருவாரம் கால அவகாசம் வழங்கி உடன் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார். (ம-4,7)

# காங்கேசன்துறை - நாகபட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

காங்கேசன்துறைக்கும் - நாகபட்டினத்துக்கும் இடையே கடல் சீற்றம் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்ட கப்பல் சேவை நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமானது.

நாகை துறைமுகத்திலிருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு கடந்த 2023 ஒக்டோபர் முதல் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டு வருகிறது. சுபம் என்ற தனியார் நிறுவனம் மூலம் 'சிவகங்கை' பயணிகள் கப்பல் சனிக்கிழமைகளை தவிர ஏனைய நாள்களில் இயக்கப்பட்டு வருகிறது.

பருவநிலை மாற்றம் காரணமாக கப்பல் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்படுவது வழக்கம். அந்தவகையில், கடல் சீற்றம் மற்றும் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையை அடுத்து ஜூன் 13ஆம் திகதி முதல் கப்பல் சேவை நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கையை திரும்பப் பெற்றது. இதையடுத்து, காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை நேற்று முன்தினம் (18) காலை வழக்கம்போல் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, சிவகங்கை கப்பல் 95 பயணிகளுடன் புறப்பட்டு காங்கேசன்துறைக்குச் சென்றடைந்து. பின்னர் இலங்கையிலிருந்து 108 பயணிகளுடன் பிற்பகல் புறப்பட்ட கப்பல் மாலையில் நாகபட்டினம் துறைமுகத்துக்கு திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

# கஞ்சா கலந்த மாவாவுடன் குருநகரில் இளைஞன் கைது

குருநகர் வைத்தியசாலைக்கு முன்பாக கஞ்சா கலந்த மாவா வைத்திருந்த 19 வயது இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், குருநகர் பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(ம-4,7,104)

## மனிதனுக்குத்...

முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட 12 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நோய் எதிர்ப்பு மருந்தான ஹியூமன் இமியுனோ குளாபியுலின் மருந்தில் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கொடிய பக்ரீறியா நீர் இருந்தமை நீதிமன்றத்தில் நேற்று (19) வெளிக்கொணரப்பட்டது.

இந்த மருந்து தொடர்பில் நடத்தப்பட்ட சர்வதேச விசாரணைகளின் முடிவுகளை பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகள் என அடையாளம் காணப்பட்ட ஹியூமன் இமியுனோ குளாபியுலின் மற்றும் ரிரொட்சிமெப் மருந்துகள் உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட ஜேர்மனி ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.

பரிசோதனை அறிக்கைக்கு அமைய ஹியூமன் இமியுனோ குளாபியுலின் மருந்தில் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய கொடிய பக்ரீறியா நீரும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்தான ரிரொட்சிமெப் மருந்தில் உப்பு நீர் மாத்திரமே உள்ளதாகத் தெரிவித்தார். (ம-7,4)

## மயங்கி...

காரைநகரில் மயங்கி விழுந்த பெண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.

காரைநகர் - களபூமியைச் சேர்ந்த கேதீஸ்வரன் சசிகலா (வயது 50) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் நேற்று காலை கோவிலுக்கு செல்வதற்குத் தயாராகியவேளை திடீரென மயக்கமுற்றுள்ளார். உடனடியாக காரைநகர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-4,7,33,60,104)

## தாக்கி...

ரேலிய இராணுவம், ஈரானின் அராக் பகுதியிலுள்ள அணு உலையை குறிவைத்துத் தாக்கியதாகவும், புளூட்டோனியம் உற்பத்தியில் முக்கிய அங்கமாக இருக்கும் அணு உலையின் மைய அமைப்பு உட்பட அனைத்தும் தாக்கி அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

உலையை மீட்டெடுத்து அணு ஆயுத மேம்பாட்டிற்கு பயன்படுத்துவதைத் தடுப்பதே இந்த வேலைதிட்டத்தின் நோக்கம் என்றும் நடான்ஸ் பகுதியில் உள்ள ஒரு அணு ஆயுத மேம்பாட்டு தளமும் தாக்கப்பட்டதாக இராணுவம் மேலும் கூறியது. அறிக்கையின்படி, ஒரு இரவில் சுமார் 40 இஸ்ரேலிய விமானப்படை ஜெட் விமானங்கள் இந்த தாக்குதல்களில் பங்கேற்றன. (ம-4,7)

## செம்மணி...

கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இப் போராட்டம் இடம் பெற உள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-4,7,33)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் கட்டுரைப்போட்டி - 2025

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடல் அமைப்பினால் வழமை போன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு எதிர்வரும் 2025.06.24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சைவம், தமிழ், பண்பாடு, கலாசார விழுமியங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலயங்களிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. கனிஷ்ட பிரிவு - 6,7,8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 100 சொற்கள்
2. மத்திய பிரிவு - 9,10,11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 150 சொற்கள்
3. மேற்பிரிவு - 12,13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கானது 250 சொற்கள்

ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

கட்டுரைகள் யாவும் மதிப்பீட்டு குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று சிறந்த கட்டுரைகளுக்கு பரிசில்களும் ஏனைய 7 சிறந்த கட்டுரைகளுக்கு பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டிக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் யாவும் நல்லூர் கந்தசுவாமி கோவில் பூங்காவனத் திருவிழா நிகழும் 23.08.2025 ம் திகதி சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வழங்கப்படும்.

இல. 331 கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

எஸ். சுதர்சன்,
இணைச்செயலாளர்

(ஐ)

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையின் மேனாள் செயலாளர் **அமரர் த.யோகேஸ்வரன்** அவர்களின் அன்பு மனைவியும் இராஜகோபுரத் திருப்பணி உபயகாரருமான

**அமரர் இரத்தினேஸ்வரி யோகேஸ்வரன்**

அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைதிருவடியில் சாந்தி பெற முருகப்பெருமானை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குவலயத்தில் 31.05.1952
சிவமயத்தில் 19.06.2025

(4585)

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

மாத்தனைக் க[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி விவகாரம்; சர்வதேச உதவி அவசியம்

## பிரிட்டன் வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் எழுதிய உமாகுமரன்

(லண்டன்)

**செம்மணி மனிதப் புதைகுழியில் சமீபத்தில் குழந்தைகளின் உடல்கள் உட்பட பல உடல்கள் மீட்கப்பட்டமை குறித்து பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் லமிக்கு கடிதமொன்றை எழுதியுள்ள பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் இந்தப் புதைகுழி குறித்த விசாரணைக்கு சர்வதேச சகாக்களுடன் இணைந்து பிரிட்டன் ஆதரவளிக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்**



மனிதப் புதைகுழியை தோண்டும் நடவடிக்கைகளிற்கு சர்வதேச உதவி இலங்கைக்கு அவசியம் என அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

பாராளுமன்றத்தில் எழுத்து மூலம் எழுப்பிய கேள்விக்கு வெளியுறவுத் துணைச் செயலாளரின் பதில் மே 15 ஆம் திகதி கிடைத்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். அந்தப் பதிலில் அவர் இலங்கையின் உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி மற்றும் உண்மை, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவை குறித்து பிரிட்டிஸ் அரசாங்கம் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுக்கும், வலியுறுத்தும் என அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் யுத்தத்தின் முடிவில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களிற்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பதற்கான உங்களின் தனிப்பட்ட ஆதரவிற்கும் நான் நன்றியுடையவளாக உள்ளேன்.

இலங்கையின் வடபகுதியில் மூன்று குழந்தைகளின் உடல்களுடன் சமீபத்தில் மற்றுமொரு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட பயங்கரம், இந்த அட்டூழியங்கள் எவ்வளவு பாரியவை என்பதை அதிர்ச்சியூட்டும் நினைவுபடுத்தல்களாக காணப்படுகின்றன.

2024 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கை சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் உடல்களை தோண்டுவதற்கான போதிய வளங்கள் இலங்கையிடம் இல்லை எனத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் மனிதப் புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளிற்காக சர்வதேச உதவியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அந்த அறிக்கை கேட்டுக்கொண்டிருந்தது.

இந்த அடிப்படையிலும், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், நீதி ஆகியவற்றிற்கான பிரிட்டனின் ஆதரவின் அடிப்படையிலும் இலங்கைக்கு இந்த விடயத்தில் பிரிட்டனின் ஆதரவு குறித்த தற்போதைய அல்லது திட்டமிடப்பட்ட திட்டங்களை நீங்கள் வெளிப் படுத்த வேண்டும்.

மார்ச் மாதம் நீங்கள் தடைகளை அறிவித்தவேளை சர்வதேச அளவில் நீதி மற்றும் பொறுப்புக்கூறல்,பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளிற்காக குரல்கொடுக்கும் தொழில் கட்சியின் நீண்டகால பாரம்பரியத்தை நீங்கள் பின்பற்றினீர்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்தது போன்று, யுத்தக் குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் பாரப் படுத்தவேண்டும் என்ற எனது வேண்டுகோளை நீங்கள் கருத்தில் எடுப்பீர்கள் என கருதுகின்றேன்.

உயிர்பிழைத்தவர்கள், பதிலைத் தேடும் குடும்பங்கள், இந்தக் குற்றங்களின் நிழலில் வளர்ந்த அடுத்த தலைமுறைக்கு நாங்கள் கடன்பட்டுள்ளோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# ரயில்வே கட்டுப்பாட்டாளர்களின் வேலைநிறுத்தம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரயில்வே கட்டுப்பாட்டாளர்களின் வேலைநிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ரயில்வே பொது முகாமையாளருடன் நேற்று நடந்த கலந்துரையாடலுக்குப் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டதாக இலங்கை ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



இலங்கை ரயில்வே கட்டுப்பாட்டாளர் சங்கம் வெள்ளிக்கிழமை (ஜூன் 20) நள்ளிரவு முதல் 48 மணி நேர தொழிற்சங்கப் போராட்டத்தை தொடங்கப் போவதாக முன்னர் அறிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# குறைந்தது தேங்காய் விலை

(கொழும்பு)

நாட்டில் தேங்காய் விலை அதிகரிப்பு என்பது பாரிய சிக்கலை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது தேங்காய் விலை குறைவடைந்துள்ளது.

குறிப்பாக கொழும்பில் தேங்காய் ஒன்றின் விலை 220 முதல் 250 ரூபாய் வரையில் காணப்பட்ட நிலையில் தற்போது அது 130 தொடக்கம் 185 ரூபாய் வரையில் காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நாட்டில் ஒரு தேங்காயின் விலை 200இற்கும் மேல் காணப்பட்ட நிலையில், தற்போது தேங்காய் விலை குறைவடைந்துள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டின் ஜூன் மாதங்களில் தேங்காய் அறுவடையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருக்கும் என லுணுவில தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர்களை அழைத்து வரத் தயார்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

போர்ச்சூழ்நிலை காரணமாக விசேட தேவை ஏற்பட்டால், இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளதாகவும், எல்லையோர நாடுகள் வழியாக இலங்கையர்களை மீண்டும் அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமூக ஜனநாயகக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் இவ்வாறு கூறினார். (நி)


யா/வேலணை மத்திய கல்லூரியின்
கண்ணீர் அஞ்சலிகள்



தோற்றம்-1944.02.01
மறைவு-2025.06.18

எமது கல்லூரியின் உடற்கல்விப் பாட ஆசிரியர் திரு.மகேந்திரராசா சயந்தரூபன் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்.தெய்வநாயகி மகேந்திரராசா

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயர்கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(c-3228)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/வேலணை மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்க ஆதரவில் அகில இலங்கை ரீதியில் அழைக்கப்பட்ட புனிதர்கள் கல்லூரிகளுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி நாளை, நாளை மறுதினம் ஆகிய இரு தினங்கள் காலை 8 மணி முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி, இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி, கொழும்பு சென் பெனடிக்ட் கல்லூரி, அநுராதபுரம் சென் ஜோசப் கல்லூரி, மன்னார்- நானாட்டான் டிலாசால் கல்லூரி, மன்னார் சென் சேவியர்ஸ் கல்லூரி, வென்னப்புவ ஜோசவ்வாஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய கல்லூரி அணிகள் பங்குபற்றவுள்ளன. (நி)

## 2026 மகளிர் ரி-20 உலகக்கிண்ணம்

# முதல் போட்டியில் இங்கிலாந்து, இலங்கை மோதல்



இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் கடந்த செவ்வாயன்று வெளியிட்ட அட்டவணையின்படி, 2026 மகளிர் ரி-20 உலகக் கிண்ணத்தின் தொடக்கப் போட்டியில் இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

33 போட்டிகள் கொண்ட இந்தப் போட்டி அடுத்த வருடம் ஜூன் 12 ஆம் திகதி எட்ஜ்பாஸ்டனில் தொடங்கும்.

இறுதிப் போட்டி ஜூலை 5 ஆம் திகதி லொர்ட்ஸில் நடைபெறும். போட்டியில் பங்கேற்கும் 12 அணிகள் தலா ஆறு பேர் கொண்ட இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்படும்.

ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெறும்.

அரையிறுதிப் போட்டிகள் முறையே ஜூன் 30 மற்றும் ஜூலை 2 ஆகிய திகதிகளில் ஓவலில் நடைபெறும். குழு 1 இல் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இரண்டு தகுதிச் சுற்று அணிகள் உள்ளன. குரூப் 2 இல் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இலங்கை மற்றும் இரண்டு தகுதிச் சுற்று அணிகள் உள்ளன. ஜூன் 14 அன்று எட்ஜ்பாஸ்டனில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் மோதும் போட்டி நடைபெறும்.

லோர்ட்ஸ், ஓவல் மற்றும் எட்ஜ்பாஸ்டன் தவிர, ஓல்ட் டிராஃபோர்டு கிரிக்கெட் மைதானம், பிரிஸ்டல் கவுண்டி மைதானம் மற்றும் ஹாம்ப்ஷயர் பவுல் ஆகியவையும் உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தும். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3327

### தனுஷா

பால் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது பாத்திரமும் சுத்தமாக இருக்க வேண்டும்



நாம் மட்டும் நல்லவராக இருந்தால் போதாது. சேர்க்கையும் சரியாக இருக்க வேண்டும்.

### மிதுன்

எது பேசினாலும் உங்கள மகள் எதிர்த்து எதிர்த்து பேசுறாள் மாமா...



தப்பை உங்கள் மேல வைச்சுக் கொண்டு அவளைக் குறை சொல்லுறிங்களே மாப்பிள்ளை நீங்கள் பேசுறதால தான் அவள் எதிர்த்துப் பேசுறாள்

### மிதுரா

போன தலைமுறையில் 50 வயதில் சம்பாதிச்சத இப்போது 30 வயதுலேயே சம்பாதிச்சுறாங்கள்... என்னது சொத்தா?



அதெல்லாம் இல்லை... பிபி, சுகர், முதுகுவலி, சோர்வு...

### சரித்




### நிதிஷா

எதுக்கு வாங்கினோமோ அதைத் தவிர



மற்ற எல்லாத்துக்கும் பயன்படும் ஒரு பொருள் டைனிங் டேபிள்

### சானுகா

சின்ன வயதா இருக்கும் போது ஏழைகளுக்கு help செய்ய வேண்டும் என்று நினைச்சேன்



வளர்ந்த அப்புறம் தான் தெரிஞ்சுது அந்த ஏழையே நான் தான் என்று

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றை பார்வையிட்ட இந்திய நடிகர் மோகன்லால்

(கொழும்பு)

பிரபல இந்திய நடிகர் மோகன்லால் இலங்கை பாராளுமன்றத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

இந்திய நடிகர் மோகன்லால் விஸ்வநாதன் மற்றும் மலையாள நடிகர் குஞ்சாக்கோ போபன் ஆகியோர் படப்பிடிப்பிற்காக கடந்த 15 ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தனர்.

"பேட்ரியட்" எனும் திரைப்படத்தின் மூன்று நாட்கள் படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக அவர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில் நேற்று பாராளுமன்ற அமர்வு இடம்பெற்ற நிலையில் நடிகர் மோகன்லால் விஸ்வநாதன் பாராளுமன்றத்திற்கு வருகை தந்தார். இதன்போது பிரதி சபாநாயகர் றிஸ்வி சாலி அவரை வரவேற்றதுடன் நடிகர் மோகன்லால் பார்வையாளர் கலரியிலிருந்து பாராளுமன்ற அமர்வை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி)


# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி **இந்திரகுமார் நாகநந்தினி**

அன்பிற்கு இலக்கணமாய்!
ஆருயிர் மகளாய்!
பாசமிகு தங்கையாய், அக்காவாய்!
மாண்புமிகு மனைவியாய்!
அரவணைக்கும் அன்னையாய் !
மாமிக்கு நல்மருமகளாய்
மனம் மகிழும் மைத்துனியாய்!
அன்பிற்கினிய அத்தையாய்!
பெருமைமிகு பெரியம்மாவாய்!
எம்முடன் இன்பமாய்
வாழ்ந்த உம்மைக்
காலனவன் பிரித்துவிட்டான்!

கனவுகள் எத்தனை சுமந்திருந்தீர்!
கடவுளை முழுதாய் சரணடைந்தீர்!
கடைசி வரை எமக்குத் துணையென
நாம் எண்ண
துயரந்தனை தந்துவிட்டு
தூர தேசம் சென்றதேனோ?
மீண்டும் வருவீரோ – எம்
துயர் மீட்பதற்கு
மீண்டும் வருவீரோ ...

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் சமூகவலைத்தளங்கள் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 20-06-2025 இன்று வெள்ளிக்கிழமை மு.ப 11:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

மலர்வு-1970.02.17
உதிர்வு-2025.05.21

"இந்திர வாசம்", இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர் (1241)


# இராசிபலன்

20.06.2025
ஆனி 06, வெள்ளிக்கிழமை
நவமி காலை 6.50 மணிவரை
தசமி பின்னிரவு 4.26 மணிவரை

ரேவதி முன்னிரவு 7.16 மணிவரை
சுபநேரம் 5.54-7.24 மணிவரை
இராகுகாலம் 10.24-11.54 மணிவரை

சந்திராஷ்டமம்- பூசம், உத்தரம்

**வளவன்**

**மேஷம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வேலைச்சுமை கூடும்.

**கடகம்** — தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாடு நன்மை தரும், உடல் நலன் சீராகும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** — வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மகரம்** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** — பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**சிம்மம்** — குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாணபயமுண்டு.

**விருச்சிகம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், கல்யானக் கனவுகள் நனவாகலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்** — ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உற்சாகமான நாள், கௌரவமான நாள்.

**கன்னி** — விரும்பிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** — திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**மீனம்** — எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**புத்திசாலி ஒவ்வொரு நாளையும் நல்ல நாளாக ஆக்கிக் கொள்வான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய உறவை மேம்படுத்த சுற்றுலாத் துறையை ஊக்குவிப்போம்!

## துணைத் தூதுவர் சாய்முரளி



(யாழ்ப்பாணம்)

**இலங்கை மற்றும் இந்தியாவை இணைக்கும் நாகரிகம் கலாசாரம் மற்றும் புவியியல் உறவுகளை மேம்படுத்த எல்லைகள் கடந்து சுற்றுலாத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும் என இந்திய துணை தூதுவர் சாய் முரளி தெரிவித்துள்ளார்.**

இந்தியா - இலங்கை சுற்றுலா உறவுகளை வலுப்படுத்த இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த "சுற்றுலா மாநாடு - 2025 " யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டை இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் வட மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் அ.பத்தினாதன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

தனது தொடக்க உரையில், துணைத் தூதுவர் சாய் முரளி தெரிவிக்கையில், இந்தியாவையும் இலங்கையையும் இயற்கையாகவே இணைக்கும் வரலாற்று, கலாசார மற்றும் புவியியல் ரீதியான அண்மைத்தன்மை உள்ளது.

இது இருதரப்பு உறவில் சுற்றுலாவை ஒரு முக்கிய அங்கமாக ஆக்குகிறது.

அண்மையில் தொடங்கப்பட்ட நாகப்பட்டினம்-காங்கேசன்துறை படகு சேவை, யாழ்ப்பாணம் - சென்னை மற்றும் திருச்சி விமான சேவைகள் முக்கியமானது.

இலங்கையின் சுற்றுலா மேம்பாட்டிற்கு இந்தியாவின் ஆதரவு மேலும் இருக்கும்.

அனைத்துப் பங்கேற்பாளர்களும் தீவிரமாகப் பங்கேற்கவும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும், இலங்கையின் வட மாகாணத்தின் முழு சுற்றுலா திறனையும் வெளிக்கொணர ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை ஆராய வேண்டும் என தெரிவித்தார். (8-33)

# நல்லிணக்கத்திற்கான முயற்சிகளை முன்னெடுத்து செல்வோம்-பிரிட்டன் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த நிலையில் நேற்று முன்தினம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்திருந்தார்.

யாழில். உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் அவர்களைச் சந்தித்த தூதுவர், அவர்களின் குறைகளையும் நீதிக்கான போராட்டத்தையும் கேட்டறிந்தார்.

அத்துடன் நல்லிணக்கத்திற்கான முயற்சிகளைப் பிரிட்டன் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லும் என உறுதி அளித்தார். (8-33)

# கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் நேரடி வேட்பாளர்களாக போட்டியிட்டு வெற்றி பெற்ற பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அரியாலைப் புங்கன் குளம் வீதியில் அமைந்துள்ள J Guest Hotel இல் இடம்பெறவுள்ளது என யாழ். சமூக செயற்பாட்டு மைய பிரதம நிறைவேற்று அலுவலர் ந.சுகிர்தராஜ் அறிவித்துள்ளார். (8)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தெற்கு, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என ஆலய பரிபாலன சபைச் செயலாளர் ச.சசிகுமார் அறிவித்துள்ளார்.

குறித்த .பொதுக்கூட்டம் 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் கோரமின்மை காரணமாக மேற்குறித்த திகதிக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## ஈசுர விநாயகருக்கு நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம்-பறாளாய் ஈசுர விநாயகர் ஆலய கொடியேற்றத் திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மஹோற்சவக் குரு வித்தியாசாகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது என ஆன்மிகவாதியும் சந்ததிப்பூசகரும் பரம்பரைப் பரிபாலகருமாகிய சோழியபூரான் பிறைசூடிக்குரு அறிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 600 | 700 |
| தக்காளி | 400 | 400 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 250 | 250 |
| கோவா | 500 | 400 | 600 | 500 |
| கரட் | 800 | 750 | 800 | 700 |
| பூசணி | 120 | 140 | 150 | 150 |
| புடோல் | 150 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 150 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 700 | 800 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 400 | 400 | 300 | 500 |
| பீற்றூட் | 400 | 350 | 500 | 400 |
| கறிமிளகாய் | 800 | 750 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 1400 | 1300 | 1200 | 1500 |
| போஞ்சி | 600 | 700 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 300 | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 40-80 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 150-180 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 500 | 600 | 600 |
| முள்ளங்கி | 250 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | 200 | 100 | 250 |

# உயர்ஸ்தானிகர்-துணைவேந்தர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தருடன் சந்திப்பொன்றில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, பிரித்தானியாவுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான ஆய்வு மற்றும் கற்றல் நடவடிக்கைகள் தொடர்பிலும், யாழ்ப்பாண இளைஞர்களின் எதிர்கால நடவடிக்கைகளில் பிரித்தானிய அனுசரணை பற்றியும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. (8-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரும் உயர்ஸ்தானிகர்

## அழுத்தம் கொடுக்கும் அமைப்புக்கள்

**(கொழும்பு)**
**ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் பேரவை யின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிடம் 5 முன்னணி சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள், இலங்கை தொடர்பில் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.**

இலங்கையில் தீர்க்கப்படாத மனித உரிமை மீறல்களுக்கு, சர்வதேச விசாரணையை வலுப்படுத்தவும், பொறுப்புக்கூறலைக் கோரும் வகையிலும், இலங்கைக்கான பயணத்தை அவர் பயன்படுத்த வேண்டும் என்றும், குறித்த அமைப்புகள் கோரியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டுக்கான ஆசிய மன்றம், அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை பிரசாரம் என்பன இந்த கோரிக்கையை விடுத்துள்ளன.

யாழ்ப்பாணம் செம்மணியைப் போன்ற, உள்நாட்டுப் போர் உரிமை மீறல்களுடன் தொடர்புடைய மனித புதைகுழிகள் மற்றும் தெற்கில் உள்ள மனித புதைகுழிகளைப் பார்வையிட வேண்டும் என்றும் அந்த அமைப்புகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிடம் வலியுறுத்தியுள்ளன. (நி)



# INVITATION FOR BID 2025/ 04
## DELFT PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee**,on behalf of the Delft Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway & building construction for grade mentioned in the table below.
Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.

4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-06-20 To 2025-07-04** during **09:00 Hrs. and 14:00 Hrs.**

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Delft Pradeshiya Sabha (T.P:021 221 5211, email: tsecretarydelft@yahoo.com) from 9:00 Hrs. to 14:00 Hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.

6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Delft Pradeshiya Sabha on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below.**

8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | from 2025-06-20 To 2025-07-04 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-06-27 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2025-07-04 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(7)/2/PSDG /2025/05 | Extension work of Indoor play area at delft | 4.13 | 90 | C8 or Above (building) | 3000.00 | 42,000.00 | 19.09.2025 | 22.08.2025 |
| NP/14/41(7)/2/PSDG /2025/06 | Construction of Vediyarasan Koddai Road at Delft | 1.69 | 60 | C9 or Above (Highway) | 3000.00 | 17,000.00 | 19.09.2025 | 22.08.2025 |

Chairman,
Local Authority Procurement Committee,Delft Pradeshiya Sabha,
20-06-2025



சுழிபுரம்- பறாளாய்

ஈசுர விநாயகர் கொடியேற்றத் திருவிழா

காலம் :- 21.06.2025 நாளை சனிக்கிழமை

நேரம் :- மு.ப 10.30 மணியளவில்

மஹோற்சவகுரு

"வித்தியாசாகரம்" சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் அவர்கள்

(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேசத் திருக்கோவில், சண்டிலிப்பாய்)

[4580]

சோழியபுரான் பிறைசூடிக்குரு, ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# “நீங்களே உங்கள் கல்லறையை தோண்டத் தொடங்கிவிட்டீர்கள்”

## ஈரான் அனுப்பிய மிரட்டல் குறும் செய்தி



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு ஈரானியர்களிடமிருந்து மிரட்டல் தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளதாக இஸ்ரேல் தகவல்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த மிரட்டல் அழைப்புக்கள் நேற்று முன்தினம் வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மிரட்டல் அழைப்புக்கள் மாத்திரமின்றிக் குறுந்தகவல்களும் பெறப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அதில் “நீங்களே உங்கள் கல்லறையைத் தோண்டத் தொடங்கிவிட்டீர்கள், தயாராக இருங்கள்” என்று கூறப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மிரட்டல் அழைப்பு சம்பவம் இஸ்ரேல் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் அரசு தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது.

ஈரான் இஸ்ரேல் போரில் தொடர்ந்து ஈரான் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இஸ்ரேலை விட ஈரான் கையே இதில் ஓங்கி உள்ளது.

இஸ்ரேல் - ஈரான் மோதல் தீவிரமடையக் கூடும் என்ற நிலையில், அமெரிக்க இராணுவம் சுமார் மூன்று டஜன் வான்வழி எரிபொருள் நிரப்பும் விமானங்களை ஐரோப்பாவிற்கு அனுப்பி உள்ளது.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளில் அமெரிக்கா நேரடியாக தலையிட்டால் அமெரிக்க தளவாடங்களை ஈரான் தாக்கும் என்று தெரிவித்துள்ளது. (ரி)

# சமரசத்திற்

# கமேனியி

# பதறும்

**(டெஹ்ரான்) ●●●●●●**
**“இனி யூதர்களுக்கு இ**
**முடியாது, அந்தத் தீவிர**
**தியத்துக்கு எதிராக நா**
**இயங்க வேண்டும். சமரசத்**
**பில்லை” என்று ஈரானின் உ**
**அயதுல்லா அலி கமேனி எ**
**விடுத்துள்ளார்.**

விசேட தொலைக்காட்சி ஒளிபரப்பில் அவர் இதனைக் கூறியிருந்தார்.

இஸ்ரேல் - ஈரான் இடையேயான மோதல் அதிகரித்துள்ள நிலையில் ஈரானிய உச்ச தலைவர் அலி கமேனி எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

ஏற்கெனவே இந்த எச்சரிக்கையை ஆங்கிலம் மற்றும் பார்ஸி மொழியில் வெளியிட்ட ஈரானின் உச்ச தலைவர் தற்போது அதனை ஹீப்ரூ மொழியில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஈரானிய உச்ச தலைவருக்கு எச்சரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே அவர் பதிலுக்கு இவ்வாறு எச்சரிக்கை

# கனடா பிரதமரை சந்தித்தார் இந்தியப் பிரதமர் மோடி



(ஒட்டாவா)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உத்தியோகபூர்வ விஜயமாக வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

**பயணத்தின் முதல் நாடாக அவர் கடந்த 15ஆம் திகதி சைப்பிரஸ் நாட்டுக்குச் சென்றார்.** அங்கு அந்நாட்டு ஜனாதிபதி கிறிஸ்டோடவுலிட்சை பிரதமர் மோடி சந்தித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்திய பிரதமர் மோடி கனடா சென்றார்.

கனடாவின் கன்னாஸ்கிஸ் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஜி-7 உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி கலந்துகொண்டார்.

இந்த மாநாட்டில் கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்தித்துள்ளார்.

அத்துடன், இத்தாலி, பிரான்ஸ் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களை இந்தியப் பிரதமர் மோடி சந்தித்துள்ளார். (ரி)

# ஈரானுக்கு ஆதரவ

## வடகொரியா ஜனாதி

(பியாங்யாங்)

இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஈரான் தனியாக இல்லை. அவர்களுக்கு அனைத்து வகையிலும் ஆதரவு வழங்குவோம் என்று என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

ஈரானுக்கு அனைத்து வகையான ஆதரவும், உதவியும் வழங்க வடகொரியா தயாராக வுள்ளது . இந்த மோதலில் டெஹ்ரான் “தனியாக இல்லை”.

இந்தப் போரில் வட கொரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...கு வாய்ப்பில்லை!
## ...ன் அறிவிப்பால் ...உலகம்



**இரக்கம் காட்ட ...வாதப் பிராந் ...ம் பலத்துடன் ...த்துக்கு வாய்ப் ... உயர் தலைவர் ...எச்சரிக்கையை**

விடுத்துள்ளார்.

இதேவேளை, ஈரானின் ஆட்சியை மாற்றுவதே தற்போதைய போர் நடவடிக்கையின் விளைவாக இருக்கலாம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். (நி)

## இஸ்ரேல் - ஈரான் போர்; மூக்கை நுழைத்த புடின்



(வோஷிங்டன்)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான அணுசக்தி விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய முன்வந்ததை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடுமையாகக் கேலி செய்து விமர்சித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்க்க வேண்டும் என்றும் அதற்கு ரஷ்யா அனைத்து முயற்சிகளையும் செய்யத் தயாராக உள்ளதாகவும் புடின் ட்ரம்பிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் அளித்த ட்ரம்ப, "உங்கள் பிரச்சினைக்கு முதலில் மத்தியஸ்தம் செய்யுங்கள், "நீங்கள் இஸ்ரேல்-ஈரானைப் பற்றிக் கவலைப்படுவதற்கு முன்னர், உங்கள் போரை முடிப்பதற்குப் பாருங்கள்" என்று கூறி ட்ரம்ப் சிரித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இஸ்ரேல்-ஈரான் விடயத்தைப் பிறகு பார்க்கலாம் என்றும் டொனால்ட் ட்ரம்ப் புடினுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், உக்ரைனில் தொடர்ந்து நடைபெற்று வரும் போர் தொடர்பாக புடின் அரசுக்கு சர்வதேச சமூகத்திலிருந்து எதிர்ப்பு வரும் சூழலிலும், அவர் மேற்கொண்ட இந்த மத்தியஸ்த முயற்சி மேற்கத்தேய நாடுகளிடையே விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. (நி)

## ...ளிப்போம்
## ...திபதி உறுதி

ரி ... து ... ம் ... க ... ல் ... ல் ... ப

இராணுவம் மிக உயர்ந்த போர் தயார் நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடினமான காலங்களில் நட்பு நாடுகளைக் கைவிடுவதில்லை. ஈரானிய அணுசக்தி மற்றும் இராணுவ உட்கட்டமைப்பு மீதான இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.


அத்துடன் வோஷிங்டனால் செயற்படுத்தப்படும் கொள்கைகள் வன்முறையை அதிகரிப்பதுடன், இராஜதந்திரத்திற்கான கதவை மூடுகின்றது.

எனவே ஈரானை முழுமையாக ஆதரிப்போம்.

அமெரிக்காவின் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அழுத்தக் கொள்கைகளுக்கு எதிராக நட்பு நாடுகளுக்கு தமது ஆதரவை வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - வட கொரிய தலைவரின் இந்த கண்டனத்தையும், ஆதரவையும் ஈரான் வரவேற்றுள்ளது.


ஈரானுக்கு சர்வதேச நட்பு நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 முதல் ஜூலை 5 வரை டெங்கு ஒழிப்பு வாரம்

## தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஜூலை 5 ஆம் திகதி வரை 16 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக நுளம்புகளின் பரவல் அதிகரித்துள்ளதால், அதைக் கட்டுப்படுத்த இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தை செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவின் ஆலோசகரும், சமூக வைத்திய நிபுணருமான பிரஷிலா சமரவீர தெரிவித்தார்.

நாடு முழுவதும் 26, 775 டெங்கு நோயாளர்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட 14 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1987- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>1இல்சூரிசெவ்<br>கி-பா-62 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L , Business (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15676 | பிறப்பு-1993 -இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா-47 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Com, MBA,Tutor Mentor<br>எதிர்பார்ப்பு: படித்த, உத்தியோகமுள்ள ஆண்<br>தொ.இ: G/13978 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி-பா-16<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-BBA,Bank<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15677 | பிறப்பு - 1996 - இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>7இல் செவ்<br>கி-பா- 33<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15265 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி-பா-25<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:BA, DO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15681 | பிறப்பு-1994 - இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கிபா-18<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: PHD, Scientist (france)<br>எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/15182 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி-பா-31<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-BSC, Master, Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15683 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 14 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc, Researcher (NGO)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/12936 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி-பா: 2 3/4<br>1இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BA, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15684 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 399



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அரசரும் அமைச்சரும்!

ஒரு நாட்டுக்கு ராஜாவாக இருக்கிறவர் ரொம்பப் புத்திசாலியாக இருக்க வேண்டும். இல்லை என்றால் ரொம்பக் கஷ்டம். சரி. ராஜாவுக்குப் புத்தி போதவில்லை என்று வைப்போம். புத்திசாலியான அமைச்சர்களை பக்கத்திலே வைத்திருக்கவேணும்.

இப்படியும் இல்லை. அப்படியும் இல்லை என்றால் சங்கடம் தான்.

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார், அவர் ரொம்ப நல்லவர்தான். இருந்தாலும் ஒரு விடயத்திலே அவருக்குக் கொஞ்சம் சபலம் உண்டு. அதாவது விதம்விதமாக உடைகள் அணியவே அவருக்கு ஆசை.

எந்த ஊரிலே இருந்தாலும் எவ்வளவு விலையாக இருந்தாலும் அதை வாங்கி வந்து போட்டுப் பார்த்து விடுவார்.

ராஜாவினுடைய இந்த வீக்னெஸ்ஸை இரண்டு ஆசாமிகள் புரிந்து கொண்டார்கள். ஒருநாள் அரண்மனைக்கு வந்தார்கள். ராஜாவைப் பார்த்தார்கள். "அரசே! ரொம்ப உயர்வான துணிகளை நெசவு செய்வதிலே நாங்கள் கெட்டிக்காரர்கள்!" என்றார்கள். "அப்படியா? அப்படி என்றால் வாருங்கள். உட்காருங்கள்!" என்றார் ராஜா. "ஆனால் கொஞ்சம் செலவு அதிகமாகும்" என்றார்கள்.

"செலவைப் பற்றிக் கவலையே படாதீர்கள்!" என்றார். உடனே அமைச்சரைக் கூப்பிட்டு, "இவர்கள் எவ்வளவு கேட்டாலும் நம் அரசாங்க கஜானாவிலே இருந்து எடுத்துக்கொடுங்கள்" என்று உத்தரவு போட்டுவிட்டார்.

மந்திரிக்கு இது பிடிக்கவில்லை. இருந்தாலும் மன்னர் உத்தரவு. அதை மீற முடியுமா? "சரி என்று தலையை ஆட்டிவிட்டார்.

"அரசே! அந்தத்துணியை நாங்கள் நெய்து முடிக்க ஒரு வருட காலம் ஆகும்!" என்றார்கள்.

"பரவாயில்லை நீங்கள் எவ்வளவு காலம் வேணும் என்றாலும் எடுத்துக்கொள்ளுங்கள். இங்கே நீங்கள் தங்கியிருந்து வேலை செய்ய எல்லா வசதிகளையும் செய்து தருகிறேன்!" என்றார்.

அரண்மனையிலே ஒரு பெரிய அறையை ஒதுக்கிக் கொடுக்கும் படியாக உத்தரவு போட்டுவிட்டார்.

மறுபடியும் அந்த இரண்டு ஆசாமிகளும் மெதுவாக தலையை சொறிந்தார்கள் "அரசே! இன்னும் ஒரு முக்கியமான விடயம்.. நாங்கள் நெய்து கொடுக்கின்ற உடை அறிவாளிகள் கண்ணுக்குத் தான் தெரியும். முட்டாள்களுக்குத் தெரியாது.. அப்படி ஒரு விசேடம் உண்டு அதிலே!" என்றார்கள்.

"ஆகா! ஆக வேண்டியதைப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போயிட்டார் ராஜா. அமைச்சர் அந்த இரண்டு ஆசாமிகளையும் அழைத்துக் கொண்டு போய் தங்க வைத்தார். அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்தார்.

கஜானாவிலே பாதி காலி! இவங்களுக்கு ராஜோபசாரம் சுகமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

வெளியிலே ஏதாவது ஆள் அரவம் கேட்டால் மட்டும்.

உடனே இரண்டு பேரும் சும்மா உட்கார்ந்து தறி நெய்வது மாதிரி கையைக் காலை ஆட்டிக் கொண்டு பாசாங்கு செய்து கொண்டிருப்பார்கள் பார்க்கிறவர்களுக்கு சந்தேகம் வரும்.

"என்னடா இது. இவங்க வெறும் தறியை நெய்து கொண்டிருக்கிறார்களே" என்று! இருந்தாலும் அதை வெளியிலே சொல்வதற்குப் பயந்தார்கள். ஏன் என்றால் "முட்டாள்கள் கண்ணுக்கு அந்த உடை தெரியாது" என்று வேறு சொன்னார்களே! நமக்குத் தெரியவில்லை என்று சொல்லி முட்டாள் ஆகணுமா? - இப்படி நினைத்தக் கொண்டு எல்லோரும் கம் என்று போய் விட்டார்கள் இப்படி ஒரு வருடம் ஓடிப் போச்சு! ஒரு குறிப்பிட்ட நாளிலே அந்த இரண்டு பேரும் அரச சபைக்கு வந்தார்கள் ராஜா முன்னால் போய் நின்று வெறும் கையை நீட்டி அரசே இதோ இருக்கு பாருங்கள் உங்கள் உடை பிரித்துக் காட்டுகிறோம் பாருங்கள். ஓரம் எல்லாம் இரத்தினக்கல்லும் வைரமுமாக ஜொலிக்குது பாருங்கள்!" என்று சொல்லி சும்மா கைகளை அசைத்துப் பாவனை செய்து கொண்டார்கள்.

ராஜா உற்றுப்பார்த்தார். அவருக்கு ஒன்றுமே தெரியலே. இருந்தாலும் தெரியவில்லை என்னு சொன்னால் நம்மளை முட்டாள் என்று எல்லாரும் நினைச்சுடுவார்களே என்ற பயம். அதனாலே பார்த்தார். "ஆகா.. அற்புதம்.. கலைஞர்களே உங்க கைவேலை அபாரம்!" என்றார்.

ராஜாவே சொல்லிவிட்டார் அல்லவா? உடனே சபையிலே இருந்தவர்களும். ஆகா. நாங்களும் அதைத்தான் சொல்லணும் என்று நினைத்தோம். அதுக்குள்ளே அரசரே சொல்லிவிட்டார். பிரமாதமான ஆடை. இதுமாதிரி உலகத்திலே வேறே எங்கேயுமே கிடையாது!"

ராஜா அதன் பின்பு அமைச்சரைக் கூப்பிட்டார். இவர்களுக்கு தகுந்த மரியாதை செலுத்தி அனுப்புங்கள் என்றார். அமைச்சர் இந்த இடத்திலே தான் ஒரு யோசனை செய்தார். மெதுவாக ராஜாவின் காதோடு காதாக என்னவோ சொன்னார். அவ்வளவுதான். ராஜா உடனே. "இந்த இரண்டு பேரையும் கைகளிலே விலங்கு மாட்டி ஜெயிலிலே போடுங்கள். ஆயுள் தண்டனை விதிக்கிறேன்!"என்றார். அது மாதிரியே செய்துவிட்டார்கள். அது இருக்கட்டும். அந்த அமைச்சர் ராஜா காதிலே சொன்ன விடயம் என்ன தெரியுமா? இதுதான். "அரசே! இவர்கள் தயார் செய்திருக்கிற உடை ரொம்ப பிரமாதம் தான்! இருந்தாலும் இவர்கள் இதைவிட உயர்ந்த ஆடையை வேறு யாருக்கும் செய்து கொடுக்கக் கூடாது இல்லையா? அடுத்தபடியாக இவர்கள் தயார் செய்யும் உடை இதைவிட அழகாக இருக்கும். அதை இன்னொரு ராஜா வாங்கிவிட்டார் என்றால் நம் கௌரவம் என்ன ஆகிறது? அதனாலே இவர்கள் கையை கட்டிப்போட்டுவிடுவதுதான் நல்லது. வெளியிலேயும் விடக்கூடாது இவர்களை!" இதுதான் அமைச்சர் ராஜாவுக்கு சொன்ன ஆலோசனை.

புரிந்து கொள்ள முடியாத ராஜாவுக்கு இப்படித்தான் புத்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அமைச்சர் இந்த யோசனையைச் சொன்னதும் அந்த ராஜா என்ன சொன்னார் தெரியுமா?

"இதுக்குத்தான்.. உங்களை மாதிரி விபரம் தெரிஞ்சவர்களை பக்கத்திலே வைத்திருக்க வேண்டும் என்று சொல்வது!"

என்றார் ரொம்பப் பெருமையாக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் தியாகம்

# மீள்குடியமர்வுகளின் வெற்றி- ஆளுநர் புகழாரம்



**(கிளிநொச்சி) மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களின் தியாகத்தாலேயே பல இடங்களில் மக்களின் மீள்குடியமர்வு வெற்றிகரமாகச் சாத்தியமாகியிருக்கின்றது. அவர்களின் தியாகத்துக்கு மதிப்பளித்துப் பாராட்டுகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

முகமாலை வடக்கு பிரதேச முன்னரங்கப் பகுதிகளில் ஹலோ ட்ரஸ் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியின் நிறைவும், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட பணியாளர்களின் கௌரவிப்பும் முகமாலையில் கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலராக 2003 ஆம் ஆண்டு இணைந்து கொண்டதிலிருந்து மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுடன் இணைந்து நான் பணியாற்றியிருக்கின்றேன். அவர்களுடன் இணைந்து பணியாற்றியதை பெருமையாகக் கருதுகின்றேன். தங்கள் உயிரைத் துச்சமாக மதித்து இந்தப் பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

முகமாலை பிரதேசம் கடந்த காலத்தில் போரின் எச்சங்களை வைத்திருந்தது. மக்களின் மீள்குடியமர்வுக்கு அது தடையை ஏற்படுத்தியது. இன்று அது மக்களுக்கு பயனுள்ள ஒன்றாக வெற்றிகரமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது.

ஹலோ ட்ரஸ் நிறுவனம் மகத்தான சவால்களை எதிர்கொண்டு மேற்கொண்ட அவர்களின் கடினமான முயற்சிகள், நமது மக்களின் பாதுகாப்பான மீள்குடியேற்றத்துக்கும் அவர்களின் வாழ்வாதாரங்களின் மறுமலர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன.

இந்த நிலத்தை தரிசாக வைத்திருக்கும் மற்றும் அதன் மக்களைக் காத்திருக்க வைக்கும் மறைக்கப்பட்ட அச்சுறுத்தல்களை அகற்ற ஹலோ ட்ரஸ், பெரும்பாலும் ஆபத்தான சூழ்நிலைகளில் அயராது உழைத்து வருகிறது.

இது வெறும் நிலத்தை சுத்தம் செய்வது பற்றியது மட்டுமல்ல, நம்பிக்கையை கட்டியெழுப்புவது பற்றியது. இது குடும்பங்களுக்கு தங்கள் வீடுகளை மீண்டும் கட்டியெழுப்பவும், தங்கள் வயல்களை மீண்டும் பயிரிடவும், தங்கள் குழந்தைகளை பயமின்றி விளையாட அனுமதிக்கவும் நம்பிக்கையை அளிப்பதாகும்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றுபவர்களின் சாதனைகளுக்கு நாங்கள் உங்களை வாழ்த்துகிறோம். இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள், அமைப்புக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எதிர்காலத்தில், இலங்கை முழுவதும் கண்ணிவெடிகளின் அச்சுறுத்தலில் இருந்து விடுபடும்நாளை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றோம். உங்கள் சேவை நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகும். அதற்காக நாங்கள் என்றென்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என தெரிவித்தார். (8)

## "நீதிக்கான நீண்ட காத்திருப்பு"

### ஆவணப்பட திரையிடலும் கருத்துப்பகிர்வும்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கண்ணீர்க்கதையாக எழுநாவின் தயாரிப்பில் அமைந்த "நீதிக்கான நீண்ட காத்திருப்பு" ஆவணப்பட திரையிடலும் கருத்துப் பகிர்வும் இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் காட்சிப்படுத்தலும் கருத்துப் பகிர்வும் நடைபெறவுள்ளது.(8-281)

## எங்களிடம் அறவிடப்பட்ட நிதி எங்கே?

### நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான கமக் கார அமைப்புக்களின் சம்மேளம் என்ற அமைப்பினால் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளிடம் அறவிட்ட பல கோடி ரூபா நிதி தொடர்பில் உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகளால் விவசாய அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த அமைச்சரிடம் மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் கீழான விவசாயத்தை நம்பி ஏழாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளிடமிருந்து இரணைமடு சம்மேளனம் என்ற அமைப்பினால் கடந்த 2013 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை விவசாயிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பல கோடி ரூபா நிதி உரிய கணக்கறிக்கைகள் இன்றியும் திணைக்களங்களின் அனுமதிகள் இன்றியும் முறைகேடாக செலவிட்டமை தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்து வருகின்றன.

இந்நிலையில் குறித்த நிதி நடவடிக்கைகள் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி விவசாயிகளால் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-315)

## விவசாயிகளை வளர்த்து எடுப்பதற்கு தொடர்ந்து பாடுபடுவோம்

### அமைச்சர் கே.டி. லால்காந்

(கண்டாவளை)

விவசாயிகளையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கின்ற வகையிலே இந்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாக கமத்தொழில் கால் நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி லால்காந் தெரிவித்துள்ளார்

நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பயிரிடப்படாத நிலங்களை பயிர்செய்கைக்கு உட்படுத்தப்படும் பிடியளவு கமநிலத்துக்கு என்ற தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றும் போது கடந்த காலங்களிலே விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டார்கள் இந்த புதிய அரசாங்கமானது விவசாயிகளையும் மக்களையும் பாதுகாத்துள்ளது. விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்குரிய மானியக் கொடுப்பனவு 15,000 ஆக இருந்தது, இதனை இருபத்து ஐயாயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதுடன் நெல்லுக்கான விலையும் 120 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

நெல்லுக்கு விலை தீர்மானிக்கப்பட்டு விட்டதனால் தனியார் துறை அந்த விலையையும் விட அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்ய முடிந்துள்ளது.

சோளத்துக்கான விலையும் 140 ரூபாய் முதல் 165 ரூபா வரை நிர்ணயிக்கப்பட்டது .ஆகவே எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் விவசாயிகளை மேன் மேலும் வளர்த்து எடுப்பதற்கும் இந்த அரசாங்கம் தொடர்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும் குறிப்பாக இந்த நாட்டு மக்க ளும் விவசாயிகளையும் பாதிக்காத வகையில் இந்த அரசாங்கம் செயற்படும் எனவும் தெரிவித்தார். (8-315-316)

## பாதீனியத்தை கட்டுப்படுத்துவோம்!



(குருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் பாதீனிய செடியை கட்டுப்படுத்தும் நோக்குடன் மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் சிரமதானம் மூலம் பாதீனியம் கட்டுப்படுத்தும் நடவடிக்கையும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்றையதினம் கிருஸ்ணபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவின் தொண்ட மாநகர் பகுதியில் சிரமதானமும் மக்களுக்கு விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. குறித்த சிரமதானம் மற்றும் விழிப்புணர்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், கிருஸ்ணபுரம் பகுதி விவசாய போதனாசிரியர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விளக்கம் அளித்த னர் அத்துடன் துண்டுப்பிரசுரமும் வழங்கியிருந்தனர். (8-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 803





என்று கூறி நந்தினி புன்னகை புரிந்தாள். அந்தப் புன்னகையில் சொக்கிப் போன மணிமேகலை, சற்று நேரம் நந்தினியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "தங்களைப் போன்ற அழகியை நான் பார்த்ததே இல்லை. சித்திரங்களிலேகூட பார்த்ததில்லை" என்று சொன்னாள்.

"பெண்ணே! நீ வேறு என் மீது மோகம் கொண்டு விடாதே! ஏற்கெனவே நான் ஒரு 'மாய மோகினி' என்பதாக ஊரெல்லாம் பேச்சாயிருக்கிறது. என் பக்கத்தில் வரும் ஆண்பிள்ளைகளை மயக்கிவிடுகிறேன் என்று என்னைப் பற்றி அவதூறு பேசுகிறார்கள்!"

"அக்கா! அப்படி யாராவது அவதூறு பேசுவது என் காதில் மட்டும் விழுந்தால், அவர்களுடைய நாக்கை ஒட்ட அறுத்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன்!" என்றாள் மணிமேகலை.

ஊராரைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை மணிமேகலை! நான் கிழவரைக் கலியாணம் செய்து கொண்டிருக்கிறேன் அல்லவா அதனால் அப்படித்தான் பேசுவார்கள்!

மணிமேகலையின் முகம் சுருங்கிற்று. ஆம், ஆம்! அதை நினைத்தால் எனக்குக் கூட வருத்தமாகத்தானிருக்கிறது. என் தமையனும் சொல்லிச் சொல்லி வருத்தப்பட்டான். அதற்காக ஒருவரைப் பற்றி கண்டபடி அவதூறு பேசலாமா, என்ன?

பேசினால் பேசிக் கொண்டு போகிறார்கள் மணிமேகலை! அப்பேர்ப்பட்ட சீதா தேவியைப் பற்றிக் கூடத்தான் ஊரில் அவதூறு பேசினார்கள். அதனால் சீதைக்கு என்ன நஷ்டம் வந்து விட்டது? என் விடயம் இருக்கட்டும் உன்னைப் பற்றிச் சொல்லு!

என்னைப் பற்றி சொல்லுவதற்கு என்ன இருக்கிறது அக்கா! அடி, கள்ளி! இன்று மாலையில் வந்து உன் மனத்தில் உள்ள அந்தரங்கத்தைச் சொல்லுகிறேன் என்று நீ கூறிவிட்டு போகவில்லையா? இப்போது என்ன சொல்லுவதற்கு இருக்கிறது என்கிறாயே?" என்று கூறிவிட்டு நந்தினி மணிமேகலையின் அழகிய கன்னத்தை இலேசாகக் கிள்ளினாள்.

"அக்கா! எப்போதும் எனக்கு இப்படியே தங்களுடன் இருந்துவிட வேண்டும் என்று ஆசையாயிருக்கிறது. எனக்கு சுயம்வரம் வைத்து, பெண்கள் பெண்களையே கலியாணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்படுத்தினால் நான் தங்களுக்குத் தான் மாலையிடுவேன்!" என்றாள் மணிமேகலை.

"என்னை நீ பார்த்து முழுமையாக ஒரு நாள் கூட ஆகவில்லை! அதற்குள் இப்படி மாயஜால வார்த்தைகள் பேசுகிறாயே? அது எனக்குச் சந்தோஷம்தான். எனக்குப் பிரியமான தோழி உன்னைப் போல ஒருத்தி இல்லையே என்று எவ்வளவோ தாபப்பட்டுக் கொண்டிருந்தேன். சோழ நாட்டின் சிற்றரசர் வீட்டுப் பெண்கள் எல்லாரும் அந்தப் பழையாறைப் பிசாசைத்தான் தேடிக் கொண்டு போவார்கள், நீ ஒருத்தியாவது எனக்கு மிச்சமிருக்கிறாயே? ஆனால் நீ சற்று முன் கூறியது நடவாத காரியம். பெண்ணுக்குப் பெண் மாலையிடுவது என்பது உலகில் என்றும் நடந்ததில்லை. யாராவது ஓர் ஆண்பிள்ளையைத் தான் நீ மணந்து கொண்டு தீர வேண்டும்.

"கன்னிப் பெண்ணாகவே இருந்துவிட்டால் என்ன, அக்கா?" "முடியாது கண்ணே! முடியாது! கன்னிப் பெண்ணாயிருக்க இந்த உலகம் உன்னை விடவே விடாது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## கரடியாரின் உதவி



(நேற்றைய தொடர்ச்சி)

சத்தமில்லாமல் இரண்டும் குகைக்குள் எட்டிப் பார்க்க நரியார் ஏதோ சிந்தனையில் அமர்ந்திருக்க சற்று தொலைவில் முயல்குட்டி திரு திரு வென விழித்தபடி முகத்தில் பயத்துடன் உட்கார்ந்திருப்பதை பார்த்தன.

அப்பாடி! என் மகன் உயிரோடு இருக்கிறான், ஆனால் எப்படி அவனை தப்பிக்க வைப்பது என்று இரண்டும் யோசித்தன.

குரங்கு முயலிடம் என் நண்பன் கரடி இருக்கிறான், வா அவனிடம் அழைத்துச் செல்கிறேன், அவன் ஏதாவது யோசனை சொல்வான்.

இவர்கள் கதையைக் கேட்ட கரடி சற்று யோசித்து, நான் நரியாரிடம் வீணாக சண்டைக்குப் போக மாட்டேன், இருந்தாலும் நான் ஒரு உபாயம் சொல்கிறேன். நீங்கள் அதற்குள் உள்ளே புகுந்து உங்கள் குட்டியைக் காப்பாற்றி கொண்டு செல்வது உங்கள் பொறுப்பு.

குரங்கும், முயலும். சரி என்று சொன்னார்கள். கரடி அவர்களுடன் வந்து நரியின் குகைக்கு சற்று தள்ளி அவர்களை மறைவாக நிற்க சொல்லி விட்டு, வெளியில் நின்றவாறு நரியாரை அழைத்தது.

வெளியே வந்த நரியார் கரடியைப் பார்த்ததும் உற்சாகமானது. இப்போது தேன் வேட்டைக்கு போகிறேன் வருகிறாயா? என்று கேட்ட கரடி யாரிடம் வேண்டாம், இப்போது பசியில்லை, இரவு பசித்தால் முயல் குட்டியைப் பிடித்து வைத்திருக்கிறேன் அது போதும், என்று சொல்லி விட்டு உள்ளே போக எத்தனித்தது. இதை ஒளிந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த முயலுக்கு அழுகையே வந்து விட்டது. நல்ல வேளை குரங்கு அதனை சமாதானப்படுத்தி, அமைதியாய் இரு, கரடியார் பார்த்துக் கொள்வார் என்று சொன்னது.

கரடியார் விடாப்பிடியாய் அது சரி, முயல் குட்டி ஒரு வேளைக்கு போதும் என்றால்அதை காலையில் சாப்பிட்டுக் கொள். இப்போது தேனுக்கு போனால் அதை இரண்டு மூன்று நாட்களுக்கு வைத்திருக்கலாம் என்ன சொல்கிறாய்?

உள்ளே போகப் போன நரியாருக்கும் சட்டென அந்த யோசனை வந்தது. அது தானே? தேனை கொண்டு வந்து வைத்து விட்டால் மெதுவாகக் கூட சாப்பிட்டுக் கொள்ளலாம் இல்லை இரண்டு நாளைக்கு கூட வைத்திருக்கலாம் என்று முடிவு செய்தவுடன் சரி, போகலாம் என்று கரடியாருடன் கிளம்பி விட்டது.

அவைகள் இரண்டும் சற்று தூரம் சென்றதும், முயலும், குரங்கும் சட்டென உள்ளே நுழைந்து, முயல் குட்டியை விடுவித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுப் பறந்தன.

கரடியாரிடம் சென்ற நரி கை நிறைய தேனடைகளை கவ்விக் கொண்டு மகிழ்ச்சியாய் உள்ளே நுழைந்தது. உள்ளே முயல் குட்டியைக் காணாமல் திகைத்து நின்றது.

இருந்தாலும் நன்றாகத் தேனைக் குடித்து வந்த மயக்கத் தில் இருந்ததாலும், வாய் நிறைய தேனடைகள் இருந்ததாலும், இரண்டு நாட்களுக்கு கவலை இல்லை என்பதால் அதிகமாக கவலைப் பட்டுக்கொள்ளவில்லை.

முயல் குரங்குக்கும், கரடியாருக்கும் நன்றி சொல்லிச் சென்றது. அது மட்டுமல்ல அவைகள் மூன்றும் உற்ற நண்பர்களாகவும் ஆகி விட்டனர்.

விலங்குகள் ஆகட்டும், மனிதர்கள் ஆகட்டும், ஒன்றை ஒன்று சார்ந்துதான் வாழ முடியும் குழந்தைகளே! இருந்தாலும், ஒரு முயல் குட்டி தப்பி விட்டதால், நரியாருக்கு எந்த உணவு தட்டுப்பாடும் வரவில்லை என்பதால், நாம் முயல் குட்டிக்கு வாழ்த்து சொல்லி, இனிமேல் ஆபத்தில் மாட்டிக் கொள்ளவேண்டாம் என்று சொல்லி விடுவோம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம் ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.
*– சார்லி சாப்லின்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போகும்போது வருமென்றோ பொய் வழியில் பொருள் சேர்த்தீர்

உலகின் நிலையாமையை மிகத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டியவர் பட்டினத்தடிகள்.

எத்தனை செல்வம் இருந்தாலும் அவை எதுவுமே எம்முடன் வரப்போவதில்லை.

அதனை உணர்த்தும் பொருட்டே **காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே** என்ற மெய்ப்பொருளை இவ்வுலகுக்கு பட்டினத்தடிகள் உணர்த்தி நின்றார்.

மிகப்பெரும் சித்தராகிய பட்டினத்தடிகள் நமக்குத் தந்த உடற்கூற்று வண்ணம் எத்துணை தத்துவார்த்தமானது.

முன்பெல்லாம் ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் பட்டினத்தடிகள் தந்த உடற்கூற்று வண்ணம் பாடப்படும்.மனித வாழ்வியலின் முழு அத்தியாயத்தையும் அதனூடு தரிசிக்க முடியும்.

எனினும் இப்போது உடற்கூற்று வண்ணத்தை எவரும் பாடுவதில்லை. அர்த்தமற்ற புதுப்புதுப் பாடல்கள் நுழைந்து கொள்ள, சித்த சிவயோகியாகிய பட்டினத்தடிகள் அருளிய உடற்கூற்றுவண்ணத்தை நாம் ஓரங்கட்டி விட்டோம்.

என்ன செய்வது சித்தர்கள் அருளிய ஞானப் பாடல்களை ஓரங்கட்டி, பணத்துக்குப் பாட்டு எழுதும் சமகாலத்துப் பாடலாசிரியர்களின் பாடல்களே சிறந்தவை என்று எண்ணியதால் போலும் அவற்றை உள்வாங்கி, உடற்கூற்று வண்ணத்தை தவிர்த்துக் கொண்டோம்.

பரவாயில்லை. கலி முற்றிவிட்டது. கலி முற்றினால் ஞானத்தைத் தேடுகின்ற பக்குவத்துக்கே முதலில் அழிவு. ஆகையால் உடற்கூற்றுவண்ணத்தை ஒதுக்கி எங்களை நாங்கள் அதலபாதாளத்துக்குள் வீழ்த்திவிட்டோம் அவ்வளவுதான்.

இஃது ஒருபுறமிருக்க, எதெல்லாம் இன்பம் என்றிருந்தாயோ அவையெல்லாம் துன்பம். **மாடு உண்டு கன்று உண்டு மக்கள் உண்டு என்றெண்ணி மகிழ்வதெல்லாம் கேடு உண்டு எனும்படி கேட்டு விட்டோம் இனிக் கேண் மனமே...** என்று மனிதர்களைப் பார்த்து விழிக்கின்ற பட்டினத்தடிகள்; ஐந்தெழுத்து எனும் நமசிவாய மந்திரத்தை ஓதி படைத்தவனை நினை என்கிறார்.

உண்மையில் அரசியல்வாதிகளுக்குப் பட்டினத்தடிகளின் உபதேசத்தைக் கட்டாய பாட மாக்கினால் கூடத் தகும்.

ஆம், சுகாதார அமைச்சராக இருந்த ஹெகலிய ரம்புக்வெல சிறையில் அடைக்கப்பட்டார்.

இப்போது ஹெகலியவின் மனைவி, பிள்ளைகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பிணை வழங்கப்பட்டுள்ளது எனும் போது இவையெல்லாம் எதற்காக? இப்படியொரு வாழ்க்கை தேவையா?

நோய் காரணமாக உயிருக்காகப் போராடிய மக்களுக்கு தேவையான மருந்துகளை வழங்காமல், மிகப்பெரும் ஊழல் மோசடி செய்வதற்காக உயிரைப் பறிக்கக்கூடிய மருந்துகளை இறக்குமதி செய்து மனித உயிர்களைக் கொன்ற முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு நிச்சயம் பெரும் தண்டனை காத்திருக்கிறது.

**அத்துடன் அப்பெரும் கொடுமையைச் செய்தவர்களுக்கும் அதே தண்டனை கிடைக்குமெனில், மனமே இவையெல்லாம் எதற்கு?**

# வடக்கின் மனிதப்புதைகுழிகள் வதந்தி என்று விளம்பிய நீதி அமைச்சர் இதுவரை காலமும் தூக்கத்திலா இருந்தார்

## ஹர்ஷனவின் சர்ச்சைக் கருத்திற்கு எதிராக எதிரணி விளாசல்

வடக்கில் மண்டைதீவு உள்ளடங்கலாக பல மனிதப் புதைகுழிகள் வெறும் வதந்திகள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையை பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாகக் கண்டித்துள்ளது.

இதுவரை காலமும் அவர் தூக்கத்தில் இருந்தாரா? என்று பாராளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்ததாவது,

மண்டைதீவு மனிதப் புதைகுழி உட்பட வடக்கில் உள்ள பல மனிதப் புதைகுழிகள் குறித்து வெளியிடப்பட்ட தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் சரியான தகவல்கள் இல்லாமல் அரசு இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவித்திருந்தார்.

"போர்க் காலத்திலும் சரி, போர் நிறைவுக்கு வந்த பின்னரும் வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுத் தோண்டப்பட்டன.

தற்போது கூட யாழ்ப்பாணத்திலும் ஒரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தோண்டப்பட்டு வருகின்றது.

ஆனால், போர் நடைபெற்ற காலத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணிப் புதைகுழி தவிர வேறு எந்தப் புதைகுழி தொடர்பிலும் வடக்கு மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் வதந்திகள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளமையைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

அவர் இதுவரை காலமும் தூக்கத்தில் இருந்தாரா? நீதி அமைச்சர் என்ற பதவி நிலையை மறந்து அவர் பொறுப்பற்ற விதத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது அமைச்சரவையிலுள்ள அமைச்சர்கள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றார். (ம-4,7)

## முல்லையில் பதற்றம்

# கடலுக்குச் சென்று கரைதிரும்பாத மீனவர்; இரத்தக்கறையுடன் கரை திரும்பிய படகு

## முடுக்கி விடப்பட்ட தேடுதல் பணி

முல்லைத்தீவு தீர்த்தக்கரை பகுதியிலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் மீண்டும் கரைசேராத நிலையில் அவரது படகு மாத்திரம் இரத்தக் கறையுடன் கரைசேர்ந்துள்ளமை அப்பகுதியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளதுடன் மீனவரைத் தேடும் பணிகள் துரித கதியில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

சிலாவத்தை தீர்த்தக் கரையைச் சேர்ந்த வின்சன்டிபோல் அன்ரனி கருணல் (வயது 62) எனும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த மீனவர் சென்ற படகு தனியாகக் கடலில் மிதந்து வருவதை அவதானித்த சக மீனவர்கள் அது தொடர்பில் உறவினர்களுக்குத் தகவல் கொடுத்துவிட்டு கடலில் மிதந்து வந்த படகினை கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். அவர் பயணித்த படகில், படகு இயந்திரத்தில் இன்னும் ஒரு படகு மோதியதற்கான ஆதாரங்களும் இரத்த கறைகளும் காணப்பட்டதையடுத்து மீனவரின் உறவினர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மீனவரினை 8 படகுகளில் தேடும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தென்பகுதி மற்றும் புல்மோட்டைப் பகுதியில் இருந்து வருகின்ற சட்டவிரோத மீன்பிடியாளர்கள், சாதாரண மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்ற முல்லைத்தீவு மீனவர்களுடன் தொடர்ச்சியாக முரண்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதி மீனவ அமைப்புக்கள் அச்சம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7,299)

# தமிழர் தாயகத்தில் சுயாட்சி கிட்ட வழி சமைப்பதே எமது இலக்கு

## தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எம்மை நாமே ஆளக்கூடிய சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைவதே எமது இலக்காகும் என்று இலங்கை தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் இது குறித்து உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மேலும் தெரிவித்ததாவது,

"சமஷ்டி அடிப்படையில் தீர்வு கோருவது நாட்டைப் பிரிக்கும் நடவடிக்கை அல்ல. எனவே, சமஷ்டி தீர்வு பற்றி இந்த ஆட்சியாளர்கள் படிக்க வேண்டும். வடக்கு, கிழக்கைப் பிரிப்பதற்கு பங்கு வகித்தவர்களும் ஆட்சியில் இருக்கின்றனர்.

புதிய அரசியலமைப்பு ஊடாக தீர்வு எனக் கூறப்பட்டாலும் இன்னும் முன்னேற்றகரமான நடவடிக்கை இல்லை. 30 வருடங்களாக பராமரிப்பு இல்லாமல் இருக்கும் காணிகள், காடாவது வழமை. அதனை அடிப்படையாகக் கொண்டு மக்களின் காணிகளை அபகரிப்பதற்கு இடமளிக்க முடியாது.

அத்தோடு, ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் எமக்கு கிடையாது என்றார். (ம-4,7)

## முக்கிய அரசியல்வாதிகளின்

# சட்டவிரோத சொத்துக்கள் குறித்த விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் செல்வாக்குமிக்க அமைச்சர்கள் உட்பட 28 அரசியல்வாதிகளின் சொத்துக்கள் தொடர்பாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த நபர்கள் சட்டவிரோதமாக ஈட்டிய பணத்தைப் பயன்படுத்தி குறித்த சொத்துக்களை வாங்கியதாக எழுந்த முறைப்பாடுகளுக்கமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் குறித்த பிரிவு இந்த விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இதன்படி நாமல் ராஜபக்ஷ, மஹிந்த யாப்பா அபேவர்தன, மஹிந்த அமரவீர, சாமர சம்பத் தஸநாயக்க, ரோஹித அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, கஞ்சன விஜேசேகர, சாகல ரத்நாயக்க, ஜானக திஸகுட்டி ஆராச்சி, வஜிர அபேவர்தன, மஹிபால ஹேரத், அநுர பிரியதர்ஷன யாப்பா, மனுஷ நாணயக்கார, வடிவேல் சுரேஸ், துஷார சஞ்சீவ பத்திரன, ஹர்ஷன ராஜகருணா, சாணக்கியன் இராசமாணிக்கம், பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் சாந்த அபேசேகர ஆகியோரும் உரிய விசாரணையில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இவர்கள் குறித்த பிரிவுக்கு அழைக்கப்பட்டு, அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 10

புருசோத்தமன்



ஒப்பற்ற தியாகி மாரீசன் எனத் தீர்ப்பு வழங்க வேண்டும். குப்பகர்ணனோ, இந்திரஜித்தோ ஒப்பற்ற தியாகிகள் அல்ல என என் வாதத்தை முன்வைத்து அமர்ந்த போது, நடுவர் ஆயத்தின் தலைமை நீதிபதி ஓய்வு நிலை நீதியரசர் இராம சுப்பிரமணியம் அவர்கள், மாரீசன் நேரில் வந்தால் கூட இப்படி வாதிட்டிருக்க முடியாது எனக் கூறிய போது மன நிறைவு ஏற்பட்டது.


நோக்கர்கள் சார்பில் பேராசிரியர் இராதாகிருஷ்ணன் அவர்களின் மகன் மாது; நோக்கர்கள் மாரீசனை நீக்கியது சரி என வாதிட, ஒப்பற்ற தியாகி இந்திரஜித் என்ற தீர்ப்புக்காக பர்வீன் சுல்தானா வாதிட்டார்.

தொடர்ந்து உமா தேவ ராஜன் கும்பகர்ணனே ஒப்பற்ற தியாகி என முதன் நிலை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மேன் முறையீட்டு நீதிமன்றம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.


ஈற்றில் தீர்ப்புரை. மூன்று நீதிபதிகளும் தனித் தனியாகத் தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

அதில் முனைவர் தெ.ஞான சுந்தரம், புதுச்சேரிக் கலெக்டர் குலோத்துங்கன் ஆகியோர் தீர்ப்புக்களைக் கூறாமல் தத்தம் கருத்துக்களை முன் வைத்தனர்.

இதில் புதுச்சேரிக் கலெக்டர் குலோத்துங்கன், நான் முன்வைத்த விடயங்களை பிரஸ்தாபித்திருந்தார். அதில் கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோர் ஒப்பற்ற தியாகிகள் அல்ல என்பதற்கு அவர்களிடம் காணப்பட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டி, எனவே அவர்கள் பொருத்தமற்றவர்கள் என நிறுவியமை இந்திய நிர்வாக சேவை பரீட்சையில் கையாளப்படுகின்ற ஒரு நுட்பம் எனக் கூறியதுடன் கும்பகர்ணனும் இந்திரஜித்தும் இராவணனின்



பஞ்சவடி ஆஞ்சநேயர் ஆலயம்



உறவுகள். தவிர, இராவணனின் சொத்துக்களை அனுபவித்தவர்கள். ஆனால் மாரீசன் அவ்வாறல்ல என முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனக் கூறி தனது கருத்தைத் தலைமை நீதிபதி உள்ளிட்ட சபைக்கு முன் வைத்தார்.

இறுதியாக நீதியரசர் வி.இராமசுப்பிரமணியன் தீர்ப்பு வழங்கினார். தனது தீர்ப்புரையில் மாரீசன் தியாகியல்ல. ஒப்பற்ற தியாகி கும்பகர்ணன் என முதன்நிலை நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்தத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி யார் என்று நாம் பார்க்க வேண்டும். அந்தத் தீர்ப்பை வழங்கியவர் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.

ஆக, கும்பகர்ணனே ஒப்பற்ற தியாகி என்று முதன் நிலை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இந்த மேல் முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்கிறது எனக்கூற, சபை கரகோசத்தில் மூழ்கியது.

இங்குதான் ஒரு விடயத்தைக் கூறியாக வேண்டும். அதாவது கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் ஒரு தீர்ப்பை வழங்கினார் என்றால் அதனை, நிராகரிப்பது கடினம் என்று இந்தியப் பேச்சாளர்கள் கருதுகின்ற நிலையில், கம்பவாரிதியின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றில் வாதிடுவதற்கு இலங்கையைச் சேர்ந்த யான் முன்வந்தமை விமர்சனத்திற்குரியதே.

தொடர்ந்து நன்றியுரையுடன் புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் 58 ஆவது கம்பன் விழா நிறைவு பெற்றது.


இதனிடையே விழா நிகழ்வுகளைத் தவிர, நேரம் கிடைக்கின்ற போது புதுச்சேரியின் முக்கிய இடங்களைப் பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

அந்த வகையில் கம்பவாரிதி அவர்கள் புதுச்சேரிக்குப் போகின்ற போதெல்லாம் தவறாமல் செல்கின்ற ஆஞ்சநேயர் கோயிலுக்கு இப்போதும் செல்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

**ஆஞ்சநேயர் ஆலயம்**

புதுச்சேரியில் அமைந்த ஆஞ்சநேயர் ஆலயம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. 36 அடி உயரமான ஆஞ்சநேயர்



மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு வீதியூடாக ஆலயத்திற்குள் சென்றோம். அங்கு பரிவார மூர்த்தியாக மேல் திசை நோக்கி பிள்ளையார் எழுந்தருளியுள்ளார்.

அந்தப் பிள்ளையாருக்கு **வலம்புரி ஸ்ரீ மஹா கணபதி** என்பது நாமம். அந்த நாமம் அடங்கிய பெயர்ப் பலகை அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

வலம்புரி மஹா கணபதி என்ற பெயர்ப் பலகையைக் கண்டதும் நான் திகைத்துப் போனேன்.

வலம்புரி விநாயகன். அதிலும் எங்கள் வலம்புரி நாளிதழின் அச்செழுத்தில் (Font) வலம்புரி மஹா கணபதி என்ற பெயர் பொறிக்கப்பட்டு இருந்தமை என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது.

(திங்கள் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.தெற்கு...

வதற்கான அமர்வு நேற்றுப் பிற்பகல் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா பிரகாஸும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை சேர்ந்த கருணைநாதன் அபாராசுதனும் முன்மொழியப்பட்டனர்.

பகிரங்க வாக்களிப்பில் நடைபெற்ற தவிசாளர் தெரிவில்,

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த தியாகராஜா பிரகாஸுக்கு ஆதரவாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த 13 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சேர்ந்த ஒரு உறுப்பினர் என மொத்தமாக 14 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த கருணைநாதன் அபாராசுதனுக்கு ஆதரவாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸை சேர்ந்த 6 உறுப்பினர்களுமாக 12 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது நடுநிலையாகச் செயற்பட்டனர்.

இதன் அடிப்படையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த தியாகராசா பிரகாஸ் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்து இடம்பெற்ற பிரதித் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த செல்வரத்தினம் உதயகுமாரன் 14 வாக்குகளைப் பெற்று வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் பிரதித் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ம-7,4,33,104)

## வலி.மேற்கு...

மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

26 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 10 ஆசனங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 6 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா 2 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேட்சை குழு ஆகியன தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

தவிசாளர் பதவிக்காக இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் ச.ஜெயந்தன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் சுப்பிரமணியம் தர்மலிங்கம் நந்தகுமார் ஆகியோர் போட்டியிட்டனர்.

இதில் பகிரங்க வாக்கெடுப்பினை 18 பேரும் 8 பேர் இரகசிய வாக்கெடுப்பினையும் கோரினர். அந்தவகையில் பெரும்பான்மை அடிப்படையில் பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன் போது க.ஜெயந்தன் 15 வாக்குகளும் சுப்பிரமணியம் தர்மலிங்கம் நந்தகுமார் 7 வாக்குகளும் பெற்றனர். அந்தவகையில் ச.ஜெயந்தன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ச.ஜெயந்தனுக்கு ஆதரவாக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் 10 பேரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் இரண்டு பேரும் ஐ.ம.சக்தியின் ஒரு உறுப்பினரும் சுயேட்சைக் குழுவின் ஒரு உறுப்பினரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் வாக்களித்தனர். அந்தவகையில் ச.ஜெயந்தன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உப தவிசாளர் தெரிவில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கந்தையா இலங்கேஸ்வரன் தெரிவானார். (ம-7,4,33,104)

## சைக்கிள் - மான்...

மற்றும் பிரதித் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று காரைநகர் பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

11 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபைக்கு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேட்சைக்குழு, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயேட்சைக் குழு, தமிழ் மக்கள் கூட்டணி, ஆகிய இலங்கைத் தமிழ் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய மக்கள் சக்தி ஆகியன தலா இரண்டு ஆசனங்களையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

தவிசாளர் பதவிக்காக முன்மொழியப்பட்ட சுயேட்சைக்குழுவின் கிருஷ்ணன் கோவிந்தராசனும் பிரதி தவிசாளருக்காக முன்மொழியப்பட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் ஆன்டி யையா விஜயராசாவும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவாகினர். (ம-7,4,33)

## சங்கு கூட்டணி...

தப்பட்டுள்ளதுடன் அவரிடம் விளக்கமும் கோரப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவின் போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அறிவுறுத்தலுக்கு மாறாகச் செயற்பட்ட கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் மார்க்கண்டு குமாருக்குக் கட்சியின் பொதுச் செயலாளர் நா.இரட்ணலிங்கத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், "இன்று (நேற்று) நடைபெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின்போது கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் எதிர்த்து வாக்களித்துள்ளீர்கள்.

ஆகையால் உடனடியாகஅமுலுக்கு வரும்படியாக கட்சி உறுப்புரிமையில் இருந்து நீங்கள் இடைநிறுத்தப்படுகின்றீர்கள். தங்களது இந்த நடவடிக்கை சம்பந்தமான விளக்கம் ஏதும் இருப்பின் ஒரு வார காலத்துக்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் கட்சியில் இருந்தும் பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் உடனடியாக நீக்கப்படுவீர்கள்." என்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவின்போது தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சண்முகநாதன் ஜெயந்தனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தர்மலிங்கம் சுப்பிரமணியம் நந்தகுமாரும் முன்மொழியப்பட்டனர்.

இதன்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் மார்க்கண்டு குமார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தவிசாளர் வேட்பாளரான சண்முகநாதன் ஜெயந்தனுக்கு வாக்களித்திருந்தார்.

பின்னர் அவர் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் சென்று தான் தவறுதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருக்கு வாக்களித்து விட்டதாகவும், தனது வாக்கை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினருக்கு மாற்றுமாறும் கோரினார்.

எனினும், குறித்த வாக்கு பதியப்பட்டு விட்டதாகவும், அதனை மாற்ற முடியாது எனவும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தெரிவித்தார்.

இதேவேளை, உப தவிசாளர் தெரிவின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருக்கு எதிராக மார்க்கண்டு குமார் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4,33,104)

மஹஜன சம்பத
திகதி 2025.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 5865
O 7 2 4 6 0 2
அத சம்பத
O 4 6 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 440

தன நிதானய
திகதி - 2025.06.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1895
F 13 35 44 77 F
66834

மெகா பவர்
திகதி 19/06/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2213
N 18 03 61 68 79

ஜய ஜய
திகதி 2025.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 0133
D 5 1 3 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4107
சீட்டிழுப்பு திகதி 19.06.2025
I 03 42 47 60
I

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 1174
மேடம் 06 07 09 59 மேடம்
78591 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.06.2025 573
H 3 5 2 0 7 5
57413
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,512,285.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2839
சீட்டிழுப்பு திகதி 2025.06.19 தினம் வியாழக்கிழமை
17 57 72 79 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,349,459.20

சனிதா
19.06.2025 வெற்றி வாரம் 5000
09 11 12 22 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,457,760.80
368273

சசிரி
707
19.06.2025 வியாழக்கிழமை
09 41 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4551
சீட்டிழுப்பு திகதி 19.06.2025 தினம் வியாழக்கிழமை
18 26 44 45 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,522,690.80
112109

J 18 06 26 34 35
சீட்டிழுப்பு வாரம் 2015
19.06.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,673,943.00

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2665
சீ.டிழுப்பு திகதி : 2025.06.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,237,234.40
02 14 35 45 R
822295

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 160 போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது

யாழ்ப்பாணத்தில் 160 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட குற்ற தடுப்பு பிரிவின் போதை குற்ற தடுப்புக்கு பொறுப்பாகவுள்ள பொ.பா.விஜயராஜா தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மானிப்பாய் சுதுமலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையஇளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இன்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ம-4,7,33,104)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

CERTIFICATE IN BUSINESS ENGLISH

JUNE INTAKE 2025 BATCH - II
DURATION 40 HOURS
INVESTMENT LKR 10,000
AFTER O/L's & A/L's
COMMENCE ON 28TH OF JUNE 2025
Visit our Website
021 7534 807
northernuni.lk apply@northernuni.com
(C-3225)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3229)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் Metro Branch, சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்
பரிபூரணம்
சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35.000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613
(C-3227)

# மரண அறிவித்தல்



மலர்வு 01.02.1944

உதிர்வு 18.06.2025

## திருமதி தெய்வநாயகி மகேந்திரராசா

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் 201, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி மகேந்திரராசா அவர்கள் 18.06.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மகேந்திரராசா (கணக்காளர் - ஓட்டோஸ் கம்பனி, யாழ்ப்பாணம், முன்னாள் முகாமையாளர் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்(சில்க் ப்ரடைஸ்) - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மகேஸ்வரியம்மா(சித்தங்கேணி) தம்பதியினரின் அன்பு மருமகளும் சயந்தறூபன்(ஆசிரியர் - யா/வேலணை மத்திய கல்லூரி), ஹேமறூபன்(பிரதம அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்), பிரணவறூபன்(கணக்காளர் சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜலக்ஷ்மி(பிரதி அதிபர், யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), ஷாமிலா(உதவிக் கணக்காளர் கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிதியா, அன்ஜனன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் காலஞ் சென்றவர்களான திருச்செல்வம், புனிதவதி, நடராஜா மற்றும் சிவஞானமூர்த்தி, நாகரத்தினம், சந்திரா(சீதா), குகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 20.06.2025 வெள்ளிக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.201,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 6479
077 379 5703
077 521 3247

(4577)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.